பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

09 04 2024 6 45

செவ்வாய்க்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

- தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் நெருங்கும் நிலையில் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

- தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

- மக்களவைத் தேர்தல் காரணமாக பிஜேபி தற்போது கச்சத்தீவு குறித்து பேசி வருவதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

- நாட்டில் கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவில் வேலைவாய்ப்பின்மை அதிகரித்துள்ளதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி குறை கூறியுள்ளது.

- ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

*----- இனி விரிவான செய்திகள் --*

<<<<>>>>

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் நெருங்கும் நிலையில் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராம் அருகே பிஜேபி தலைவர்களில் ஒருவரான திரு. அனுராக் தாக்கூர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

நாடு தற்சார்பு என்ற நிலையை அடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 2014ஆம் ஆண்டில் 7 எய்ம்ஸ் மருத்துவமனைகள் இருந்த நிலையில் தற்போது அதன் எண்ணிக்கை 22ஆக அதிகரித்துள்ளது என்று குறிப்பிட்டார்.

மக்களவைத் தேர்தல் காரணமாக பிஜேபி தற்போது கச்சத்தீவு குறித்து பேசி வருவதாக அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

ராமநாதபுரம் மக்களவைத் தொகுதியில் அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அதிமுக அரசு கச்சத்தீவை மீட்பதற்கு நீதிமன்றத்தை நாடியதை சுட்டிக்காட்டினார்.

ஆனால் காங்கிரஸ், திமுக ஆகியவை இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

கடந்த அதிமுக ஆட்சியில் ராமநாதபுரத்திற்கு காவிரி குண்டாறு வைகை இணைப்பு திட்டம் கொண்டுவரப்பட்டாலும் திமுக அரசு அதை நிறுத்தி வைத்துள்ளதாக திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.

நாட்டில் கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவில் வேலைவாய்ப்பின்மை அதிகரித்துள்ளதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் திரு. பிரகாஷ் காரத் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மக்களவைத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், பிஜேபி தலைமையிலான அரசு பெரு நிறுவனங்களுக்கு உதவும் அரசாக மட்டுமே இருப்பதாக குறை கூறினார்.

83 சதவீத இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி இருப்பதாகவும், 63 சதவீதம் பேர் மேல்நிலைக் கல்வி மற்றும் கல்லூரிக் கல்வியைப் பெறவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தருமபுரி மாவட்டத்தில் எந்தவித வளர்ச்சித் திட்டங்களையும் திமுக, அஇஅதிமுக அரசுகள் செயல்படுத்தவில்லை என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

தருமபுரி தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தங்கள் கூட்டணி ஆட்சியமைத்தால் தருமபுரியில் தக்காளி கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க ஏற்பாடு செய்யப்படும் என்று குறிப்பிட்டார்.

தேர்தலில் தங்கள் கூட்டணி வெற்றி பெற்றால் என்.எல்.சி நிறுவனத்தில் தமிழர்களுக்கு மட்டுமே பணி வாய்ப்பு வழங்கப்படும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் அருகே பாலக்ரையில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், அங்குள்ள பீங்கான் தொழிற்பேட்டை மேம்படுத்தப்படும் என்று கூறினார்.

நிதி நெருக்கடிக்கு இடையே திமுக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதாக அக்கட்சியின் இளைஞர் அணி செயலாளர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், காலை உணவுத் திட்டத்தின் காரணமாக 3 லட்சம் மாணவர்கள் அரசுப் பள்ளியில் சேர்ந்துள்ளதாக கூறினார்.

<<<<>>>>

ஆகாஷ்வாணி மற்றும் டி டி தமிழ் தொலைக்காட்சியில் தேசிய கட்சிகளுக்கும், மாநில கட்சிகளுக்கும் தேர்தல் ஒலிபரப்புக்கான நேர ஒதுக்கீடு தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹூ முன்னிலையில் இன்று நடைபெறவுள்ளது.

சென்னையில் உள்ள டி டி தமிழ் தொலைக்காட்சி வளாகத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியில், அரசியல் கட்சி பிரதிநிதிகளும் பங்கேற்கின்றனர்.

ஆகாஷ்வாணி மற்றும் டி டி தமிழ் தொலைக்காட்சியில் தேர்தல் ஒலிபரப்பு வரும் 12-ஆம் தேதி தொடங்கி, 16-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

<<<<>>>>

தேர்தலில் நூறு சதவீதம் வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில் தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் சென்னை மாநகராட்சியின் சார்பில் நேற்று ஐ.பி.எல். போட்டி நடைபெற்ற சேப்பாக்கம் மைதானம் பகுதியில்

விழிப்புணர்வு பணிகள் நடைபெற்றன.

மாவட்ட தேர்தல் அலுவலர் டாக்டர் ராதாகிருஷ்ணன், வாக்களிப்பதன் அவசியம் குறித்த துண்டுப் பிரசுரங்களை கிரிக்கெட் ரசிகர்களுக்கு வழங்கினார்.

மைதானத்திலும் மின்னணு திரையின் வாயிலாக வாக்களிப்பதன் அவசியம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

மைதானத்திற்கு வெளியே மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தின் மாதிரி வாக்குப்பதிவு செயல் விளக்கமும் நடத்தப்பட்டது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

விசா விதிமுறைகளை கடுமையாக்க உள்ளதாக நியூசிலாந்து அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

உகாதி பண்டிகையை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

புதுதில்லியில் முதன்மை தகவல் பாதுகாப்பு அதிகாரிகளுக்கான பயிற்சிக்கு மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

<<<<>>>>

வெலிங்டனில் உள்ள பாதுகாப்புப் படை அதிகாரிகள் கல்லூரியில் ராணுவ தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே, முப்படைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை 4 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு அனுப்பும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. ஷ்ரவண்குமார் தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலையொட்டி பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அருகே தமிழ்நாடு மற்றும் கேரள காவல்துறையினரின் அணிவகுப்பு நடைபெற்றது.

<<<<>>>>

நீலகிரி மக்களவைத் தொகுதியில் பதிவாகும் வாக்குகளை எண்ணும் மையத்தில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி அருணா அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

<<<<>>>>

அரக்கோணம் மக்களவைத் தொகுதியில் வாக்குப்பதிவு எந்திரங்களை குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி வளர்மதி தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளையில் நூறு சதவீத வாக்களிப்பை வலியுறுத்தி கல்லூரி மாணவர்களின் பேரணி நடைபெற்றது.

<<<<>>>>

திருச்சியில் வருமான வரித்துறை அதிகாரிகள் நடத்திய சோதனையில் கணக்கில் காட்டப்படாத 3 கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த கொல்கத்தா அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 137 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக கேப்டன் ஷ்ரேயஸ் ஐயர் 34 ரன் எடுத்தார்.

சென்னை அணியின் பந்துவீச்சாளர்கள் ரவீந்திர ஜடேஜா, துஷார் தேஷ்பாண்டே ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினார்கள்.

138 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய சென்னை அணி 17 புள்ளி 4 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 141 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மும்பை அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஒடிசா அணியை வென்றது.

<<<<>>>>